**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி /நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் தேதி சனிக்கிழமை**

**Cr.M.P.No. 256/2026**

கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 22/2026

மனு நாள் 19.02.2026 பிரிவு 497 பி.என்.எஸ்.எஸ்.

ஞானசேகர்,
த/பெ. இன்பராஜ்

.....மனுதாரர் / வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல்துறை சார்புஆய்வாளர்,
கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்

..... எதிர்மனுதாரர்

மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட வாகனமானது எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், தான் மேற்படி குற்ற வழக்கில் காட்டப்பட்டுள்ள Chassis Number.P53BUDCB8EJA06030 and Engine Number. M2PH1025J50026 கொண்ட WHITE COLOUR OLA ELECTRIC TECHNOLOGIES PVT LTD இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்றும், மேற்படி வாகனம் பி.ஆர்.எண்.129/2026 என்ற எண்ணில் சமூகம் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனத்தை இந்த எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் திறந்த வெளியில் வைத்துள்ளதால் வாகனத்தின் மீது தூசி படிந்து, டயர்களில் காற்று குறைந்து, மழையில் நனைந்து அதன் பாகங்கள் சிதைந்துவிடக்கூடிய சூழல் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனம் நீதிமன்ற காவலில் இருந்து வருவதால் தனக்கு தொழில் முடக்கம் ஏற்பட்டு கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், மேலும், மேற்படி வாகனங்கள் தனது வசம் இல்லாததால் மனுதாரரால் பில்டிங் கான்ராக்டர் வேலைக்குச் செல்ல முடியாமல் பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டு, மிகுந்த மன உளைச்சலில் இருந்து வருவதாகவும், மேற்படி இருசக்கர வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்காதபட்சத்தில் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதாலும், மேற்படி வாகனத்தை நீதிமன்ற பிணையில் பெற்று சென்ற பின்பு அதை உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ மாட்டேன் என்றும், மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மனுதாரர் என்றும், மேலும், மனுதாரர் தரப்பில் கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு, அதில், மேற்படி நிலையில், மனுதாரரின் உடன்பிறந்த தம்பியான இந்த வழக்கில் கண்ட எதிரி ஆகாஷ் என்பவர் கடந்த 31.01.2026-ம் தேதியில் மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட

இருசக்கர வாகனத்தை எடுத்துச் சென்று குற்றச் செயலில் ஈடுபட்டதாக எதிர்மனுதாரர் காவல் நிலையத்தினரால் கைப்பற்றப்பட்டு, பி.ஆர்.எண்.129/2026 என சமூகம் நீதிமன்ற வைப்பீட்டில் இருந்து வருகிறது என்றும், எனவே, மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், ஒப்படைவு செய்ய வேண்டி வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 22/2026 வழக்கின் சொத்தான OLA இருசக்கர வாகனமானது கைப்பற்றப்பட்டு தாங்கள் நீதிமன்றத்தில் பி.ஆர்.எண். 129/2026 பிரகாரம் பெறப்பட்டு நிலைய பாதுகாப்பில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மனுதாரரிடம் இருசக்கர வாகனத்தை ஒப்படைக்கும்பட்சத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் இருக்க வாய்ப்புள்ளது என்றும், இருசக்கர வாகனத்தை நிறம் மாற்றி, உருமாற்றி வேறு நபருக்கு விற்க வாய்ப்புள்ளது என்றும், மேலும், இதுபோன்ற திருட்டுச் செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளது என்றும், மேற்படி வாகனம் TN 79 P 9867 Engine No. M2PH1025J50026, Chassis No. P53 BUDCB8EJA06030 என்றும், மனுதாரர் ஞானசேகர் பெயரில் உள்ளது என்றும், எனவே, மனுதாரரிடம் வாகனத்தை ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை செய்வதாகவும், எடுத்துரைக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. பி.ஆர்.எண்.129/2026-ல் கண்ட சொத்தான Chassis Number.P53BUDCB8EJA06030 and Engine Number. M2PH1025J50026 இருசக்கர வாகனம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்திருப்பதாலும், மேலும், படிவம்–91 ல் பதிவெண், சேசிஸ் நம்பர், என்ஜின் நம்பர் இல்லை என்பது தெரிய வருகிறது. மனுவை பரிசீலனை செய்ததில் வண்டியினுடைய பதிவெண், சேசிஸ் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. இந்நிலையில் போலீசாரால் கைப்பற்றப்பட்ட OLA Electronic Bike–ன் சேசிஸ் எண், என்ஜின் எண் பற்றி ஒரு அறிக்கை தாக்கல் செய்ய 05.03.2026–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டதன்பேரில் 07.03.2026–ம் தேதியன்று போலீசாரால் ஒரு பதிலுரை சமர்ப்பிக்கப்பட்டது. அதில், Chassis Number.P53BUDCB8EJA06030 and Engine Number. M2PH1025J50026 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள Chassis number–ம், Engine number–ம், போலீசாரால் சமர்ப்பிக்கப்பட்ட பதிலுரையில் உள்ள Chassis number–ம், Engine number–ம் ஒன்றாக இருப்பதைக் கருத்தில்கொண்டும், மேற்படி வாகனம் நீதிமன்ற காவலில் இயக்கப்படாமல் இருந்தால் பழுதாகிவிடும் என்று மனுதாரர் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதாலும், மேற்படி வாகனத்தை கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>நிபந்தனைகள் :</u>

1. மனுதாரர் தானும், தனக்காக இரு நபர்களும் தலா ரூ.60,000/-க்கு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.
3. வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் உத்தரவிடும் நாளிலும், விசாரணையின்போதும் வாகனத்தை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. வாகனத்தின் நான்கு புறங்களையும் புகைப்படம் எடுத்து புகைப்படத்தையும் அதற்கான சி.டியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
6. பஞ்சநாமா தயாரித்து வழக்கு கோப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளின் கீழ் பி.ஆர்.எண் 129/2026 ல் கண்ட Chassis Number.P53BUDCB8EJA06030 and Engine Number. M2PH1025J50026 கொண்ட இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைவு செய்து உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.07 18:12:07 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),

சங்கரன்கோவில்.